**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 177 கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டு தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை

1 ஆம் பகுதி

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை

---

**1 அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
| --- | --- |
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் |

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,559,491,750 ஆக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,198,872,696 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாட்டிலிருந்து சேமிப்புக்கள் ரூபா 266,827,402 இற்கும் ரூபா 93,791,652 இற்கும் இடைப்பட்ட, அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 23.47 சதவீதம் மற்றும் 22.19 சதவீதத்தைக் கொண்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தல்கள் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 177 | கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | 536,730,000 | 600,100,000 | 490,789,786 | 379,212,812 | 45,940,214 | 220,887,188 |
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 286,161,750 | 136,500,000 | 270,403,571 | 58,466,527 | 15,758,179 | 78,033,473 |
| | மொத்தம் | 822,891,750 | 736,600,000 | 761,193,357 | 437,679,339 | 61,698,393 | 298,920,661 |

## 2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்கு அரச உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 177 | 17701 | 35,000,000 | 13,545,658 | 14,000,000 | 14,998,747 | 111,100,000 | 64,352,448 |
| 206 | 20601 | 17,000,000 | 4,340,948 | 6,500,000 | 10,140,283 | 86,000,000 | 41,602,118 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றினதும் பொது வைப்புக் கணக்குகள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,631,404 ஆக இருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கிலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0054/000 | 23,263,592 |
| கலாசார அலுவல்கள் திணைக்களம் | 6000/0000/00/0003/0200/000 | 964,702 |
| | 6000/0000/00/0015/0088/000 | 8,403,110 |
| மொத்தம் | | 32,631,404 |

# பகுதி 2

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டு தலைப்பு 177 – கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள் ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க நடாத்திச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) முதல் (உ) பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 முதல் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையில் கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 17701 | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு |

### (ஆ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாவொன்றிற்கு 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரையில் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்குட்பட்ட கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 32,826,442 ஆக இருந்தது.

### (இ) பாதீட்டு முரண்

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 7,000,000 ஆன மூலதன ஏற்பாடு முழுவதும் சேமிப்பாகவிருந்தது.

(ii) 08 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த

செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 63 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) சார்க் கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 180,000,000 ஆன மொத்த ஏற்பாட்டில் 38 சதவீதம் உரிய செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 747,362 தொகைக்குரிய 16 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள் - விடய இலக்கம் - 17701**

(i) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த அறவீடுகளின் ரூபா 1,285,396 ஆக இருந்ததுடன், அம்மீதிகளில் ரூபா 901,086 ஆன கடன் மீதிகளை அறவிடுவதில் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ii) பதவி வறிதாக்கப்பட்ட 10 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 821,889 ஆன கடன் மற்றும் முற்பணங்கள் என்பன 2013 யூன் 30 ஆம் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) இடமாற்றம் பெற்றுச் சென்ற 1 ஆண்டிற்கு மேல் கடந்திருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 50,300 மற்றும் ரூபா 434,061 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டுத்திட்டம்

சகல அமைச்சு செயலாளர்களுக்கும் விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது அடுத்து 03

ஆண்டுகளுக்காக கூட்டுத்திட்டமொன்று அமைச்சினால் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் (2012 – 2016) அத்திட்டம் 2012 செப்தெம்பர் 10 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டுத்திட்டத்தை தயாரித்தலானது 2012 செப்தம்பர் வரை தாமததத்திருந்தமையால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டுத்திட்டத்திற்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.4.1 இல் குறிப்பிட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 செப்தெம்பர் 04 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/கணிப்பீட்டு சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம்

திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 யூன் 30 ஆம் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------

அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள டபிள்கப் வண்டியொன்று 2001 ஆம் ஆண்டின் போது சமூர்த்தி பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சிற்குச் சொந்தமான ஜீப் வண்டியென்று முறையாக மாற்றப்படாமல் மத்திய கலாசார நிதியத்தின் பயன்பாட்டிற்காக 2005 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

-----------------------------------------------------------------------------------------------

ஏனைய நிறுவனங்களிடமிருந்த சொத்துக்கள் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) தேசிய மரபுரிமைகள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 05 மோட்டார் வாகனங்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருந்ததுடன், தனியார் பஸ் போக்குவரத்து அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வண்டியொன்றும் அமைச்சின் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டதன் பின்னர் 2008 ஆம் ஆண்டிலிருந்து ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலைக்கு உட்பட்டு அமைச்சின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ii) மத்திய கலாசார நிதியத்திற்குரிய ரூபா 7,900,000 பெறுமதியான டபிள்கப் வண்டியொன்றை கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சரின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற கையேற்கப்படாமல் விதத்தில் பயன்படுத்தப்படல்**

காணிகள் முறையாக கையேற்கப்படாமல் கீழே காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 53,686,030 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வியாங்கொடை கலாசார பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியின் உரித்தை கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சிற்கு பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பிரதேச ரீதியில் 160 கலாசார நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன், அதில் 152 நிலையங்களின் காணியின் உரித்துறுதி அமைச்சிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமிண்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| (i) 1982 இன் 043 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 8 ஏ(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் | 53,686,030 | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளாமல் வியாங்கொடை தேசிய கலாசார பயிற்சி நிலையத்தின் நிர்மாணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2008 யூன் 11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் (2008 மே 27 ஆம் திகதிய சீஏ/16/2008 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞானம்) | 4,800,000 | தம்பான ஆதிவாசிகள் மரபுரிமைகள் கேந்திர நிலையத்தின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்காமல் 2009 முதல் 2012 வரை மாதாந்தம் ரூபா 100,000 வீதம் அமைச்சினால் ஆதிவாசிகள் மரபுரிமைகள் கேந்திர நிலையத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம்<br>--------------------------- | | |
| | நி.பி 71(1),(2) மற்றும் 156(7) | 841,906 | ''சார்க் கலாசார நிலையத்தின்'' நிர்மாண செயற்திட்டத்திற்காக அமைச்சின் விருப்பத்தின் பிரகாரம் 3 பதவிகள் உருவாக்கி அதற்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>--------------------------- | | |
| | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 2013 சனவரி 31 ஆம் திகதிய 157(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 1,420,820 | ஒரு உத்தியோகத்தருக்கு உரித்தான ஆகக்கூடிய இடர் கடன்தொகையான ரூபா 250,000 எல்லையை மிகைத்து 4 உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கியமையால் மீளாய்வாண்டின் இறுதியில் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,420,820 ஆக இருந்தது. அவ்வாறு எல்லையை மிகைத்து செலுத்தப்பட்டிருந்த பணத்தை அந்த ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| | | | ருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகள் | | |
| (i) | 2.8.1 மற்றும் 2.8.3 ஆம் வழிகாட்டிகள் | 2,199,113 | ரூபா 2,199,113 பொறியியலாளர் மதிப்பீட்டில் வியாங்கொடை கலாசார பயிற்சி நிலையத்தின் ii ஆம் கட்ட நிர்மாணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலை மதிப்பீடு கொள்வனவு வழிகாட்டியிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக தனியார் கம்பனியொன்றின் பொறியியலாளர் ஒருவருக்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பளிக்கப்பட்டு அவரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | 3.8.1 ஆம் வழிகாட்டி | 3,678,599 | கலாசார நிலையத்திற்காக அவசர கொள்வனவாக ரூபா 3,678,599 ஆன பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த கொள்வனவுகள் கொள்வனவு வழிகாட்டிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கொள்ளப் பட்டிருந்தது. |
| (iii) | 5.2.1(அ),(ஆ) ஆம் வழகாட்டி | | கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை தொடர்பான சகல தகவல்களையும் உள்ளடக்கிய கேள்வி கோரல் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 6.2.2 மற்றும் 5.6 ஆம் வழிகாட்டி | | கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த காலஎல்லை மற்றும் விதந்துரைப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | 3.4.3 (இ) மற்றும் 8.1.1 ஆம் வழிகாட்டிகள் | 1,987,402 | உருக்கு வீட்டுத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சில் பதிவு செய்யப்படாத வழங்குனரிடமிருந்து விலை கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சினால் போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வியாங்கொடை கலாசார பயிற்சி நிலையத்தின் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக மீண்டுவரும் செலவினமாக முறையே 1,911,218 மற்றும் ரூபா 1,165,864 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்த பயிற்சி செயலமர்வுகளின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளவாறு இருந்தது.

| | 2011 ஆம் ஆண்டு | 2012 ஆகஸ்ட் வரை |
|---|---|---|
| வெளிநாட்டு குழாம் பயிற்சி செயலமர்வுகள் | 02 | 03 |
| பதவியணியினர் பதவியுயர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் | 04 | 01 |
| வள நபர்கள் பயிற்சி செயலமர்வுகள் | - | 01 |

(ஆ) 2008 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்ட இந்த கலாசார பயிற்சி நிலையத்திற்காக அதன் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் செயற்பாட்டு நடைமுறை என்பவற்றை உள்ளடக்கிய திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், அவ்வாறான திட்டமொன்றின் அடிப்படையில் வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) வியாங்கொடை தேசிய கலாசார பயிற்சி நிலைய நிர்மாணத்தின் 1 ஆம் கட்டத்திற்குரிய அளவீட்டுப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களுடன் இணங்காமல் செய்யப்பட்ட வேலைக்காக கழிப்பனவுகள் இல்லமல் ரூபா 816,800 ஆன முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அளவீட்டுப் பட்டியலின் A விடயத்தின் A - 1 முதல் A – 5 வரையான விடயங்களில் செய்யப்பட்டிருக்காத செயற்பாடுகளுக்காக ரூபா 18,500 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தப் பெறுமதியில் 6 சதவீதமான ரூபா 324,096 தொகையினை மதியுரைக் கட்டணமாக கொடுப்பனவு செய்வதற்கு இணங்கி கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணிப்பு தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மதியுரை சேவைகள் முறையாக நிறைவேற்றப்படாதிருக்கையில் இது தொடர்பாக கருத்தில் கொள்ளாது மதியுரைக் கட்டணத்தில் 89 சதவீதமான ரூபா 289,371 அக்கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தம்பான ஆதிவாசிகள் மரபுரிமைகள் கேந்திர நிலையத்தின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்காக ரூபா 100,000 ஆன மாதாந்த நிதிஏற்பாடு மஹியங்கனை பிரதேச செயலாளருக்கு அனுப்பி லைக்கப்பட்டிருந்த போதிலும், மரபுரிமைகள் கேந்திர நிலையம் தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான

பதவியணியினர், கடமைகளின் தன்மை, பராமரிக்கப்படுகின்ற பதிவேடுகள் மற்றும் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் தொடர்ந்தும் நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட மட்டம் | 14 | 13 | 01 |
| (ii) மூன்றாம் மட்டம் | 04 | 02 | 02 |
| (iii) இரண்டாம் மட்டம் | 450 | 410 | 40 |
| (iv) ஆரம்ப மட்டம் | 401 | 333 | 68 |
| | 869 | 758 | 111 |

### (ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள்

அமைச்சினால் முறையற்ற விதத்தில் பெற்றுக்கொண்ட மனித வளங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவியினர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| இரண்டாம் மட்டம் | 07 | மத்திய கலாசார நிதியம் | 2 ஆண்டுகள் முதல் 23 ஆண்டுகள் வரை |
| இரண்டாம் மட்டம் | 01 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 2009 மே 11 முதல் |

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப மட்டம் | 06 | மத்திய கலாசார நிதியம் | 2 ஆண்டுகள் மற்றும் 12 வரை |

**2. ஒதுக்கீட்டு தலைப்பு 206 –கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**2.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 22 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணாமை

(i) திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமல் இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| ஒதுக்கீட்டு வாக்குப் பணப் பேரேடு | நி.பி 447(3) மற்றும் (6) |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

(ii) ரூபா 2,166,942 கூட்டுத்தொகைக்குரிய 12 கொடுக்கல் வாங்கல்களுக்குரிய பற்றுசீட்டுக்கள், பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள், உடன்படிக்கைகள், விதந்துரைப்புக்கள் போன்ற ஆவணங்கள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு விலகல்**

06 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 44 சதவீதத்திற்கும் 91 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

**(இ) வரவு செலவு திட்ட துணைசேவைகள் அவசர பொறுப்புகள் செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடுகள்**

''வரவு செலவு திட்ட துணைசேவைகள் அவசர பொறுப்புகள்'' செயற்திட்டத்தின் கீழ் 2 செலவின விடயங்களுக்காக பெற்றுக்கொண்ட ரூபா 25,391,750 ஆன குறைநிரப்பு நிதிஏற்பாட்டு ஒதுக்கீடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் 67 சதவீதமான அளவிலேயே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

(i) 2 பொது வைப்புக் கணக்குகளில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,961,070 ஆன மொத்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 சனவரி 29 ஆம் திகதிய 200/2009 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 6000/0/0/3 ஆம் வகுதியின் பொது வைப்புக் கணக்குகளில் பணத்தை வைப்புச் செய்வதை இடைநிறுத்த வேண்டியதுடன், அச்சுற்றறிக்கைக்கு மேலதிகமாக 2011 யூன் 03 ஆம் திகதிய 218/2011 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 6000/0/0/3 ஆம் வகுதியின் பொது வைப்புக் கணக்குகளில் தொடர்ந்தும் காணப்படும் மீதிகள் காலாவதியான வைப்பாக கருதி நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 6000/0/0/3/200 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 964,702 ஆன மீதி தொடர்பாக அந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

i. 20601 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,224,250 ஆக இருந்ததுடன், கடன் மற்றும் முற்பணங்கள் காணப்பட்டதுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

ii. 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகளக் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் வழங்கல் தொடர்பாக பேணப்பட வேண்டிய தனிப்பட்டவர்களின் மீதிகளின் பட்டியல் முழுமையான தகவல்கள் உட்பட மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

iii. 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அசைவற்றுக் காணப்படும் 26 நிலுவைக் கடன் மீதிகளுக்குரிய ரூபா 178,757 ஐ அறவிடுவதற்கு 2013 யூன் 30 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. நிதிப்பிரமாணம் 427 ஏற்பாடுகளின் பிரகாரம், திணைக்களப்புத்தக மீதிகள் திறைசேரி புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. கடன் மற்றும் முற்பணங்களில் காணப்படும் தனிநபர் மீதிகள் பதிவேட்டின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி மற்றும் தனிநபர் மீதிகள் பதிவேட்டின் கூட்டுத்தொகைக்கு இடையே ரூபா 84,271 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 2.4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 கூட்டுத்திட்டம்

சகல அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது அடுத்துவரும் 03 ஆண்டுகளுக்காக கூட்டுத்திட்டமொன்று கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

திணைக்களத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி 2.4.1 இல் குறிப்பிட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்தமையால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் கூட்டுத்திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டதொன்றாக இருக்கவில்லை.

### 2.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 2.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய முறையே 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்து முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

திணைக்களத்தால் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 யூலை 30 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 180 நாட்கள் – 365 நாட்களிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அச்சீட்டு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென சொல்லப்பட்டு முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் 3 அகராதிகளில் 2000 பிரதிகள் வீதம் அச்சிடுவதற்காக கட்டளைகள் ஒப்படைக்கப்பட்டு 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 60 நாட்கள் – 180 நாட்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அச்சீட்டு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென சொல்லப்பட்டு 2010 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் அச்சிடுவதற்காக கட்டளைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த 01 அகராதி, 2 கலைக்களஞ்சியங்கள் மற்றும் 04 விபரக் கொத்துகள் என்பவற்றின் அச்சீட்டு நடவடிக்கைகள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக 1 முதல் 6 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தது.

(iii) கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சிங்கள கலைக்களஞ்சியத்தின் 13 ஆம் பதிப்பின் அச்சீட்டு வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அப்பதிப்பின் தயாரித்தல் நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

“தேசிய கலைஞர் விபரக்கொத்து” தயாரித்தல் தொடர்பான செயற்பாடு 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான செயல் நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஆண்டுகளில் செயன்முன்னேற்ற அறிக்கைகளிலும் இதன் செயன் முன்னேற்றம் தொடர்பாக காண்பிக்கப்படாதிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 வரையில் ரூபா 699,071 தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**கொள்வனவு வழிகாட்டி செயற்பாடுகளிலிருந்து விலகல்**

(i) 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.2.2 வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரலுக்காக வழங்கப்பட்ட காலம் ஆகக்குறைந்தது 07 நாட்களாக இருக்க வேண்டிய போதிலும், சில நினைவுச் சின்னங்கள், பல்வேறுபட்ட நூல்கள், அழைப்பிதழ் மற்றும் சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிடுவதற்காக கேள்வி கோரும் போது அதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் 1 நாள் முதல் 4 நாட்கள் வரையாக இருந்தன.

(ii) நினைவுச் சின்னங்கள், அழைப்பிதழ் மற்றும் நூல்கள் என்பவற்றை அச்சிடுவதற்கான கேள்வி கோரியதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் தொடர்பாக பரிந்துரை பெற்றுக்கொள்வதற்கு கொள்வனவு வழிகாட்டிக்

கோவையின் 7 ஆவது வழிகாட்டியின் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.3 வழிகாட்டியின் பிரகாரம் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் உரிய விதந்துரைகளுக்கு இணங்குவதாக உறுதிப்படுத்தும் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அகராதி மற்றும் கலைக் களஞ்சியங்கள் என்பவற்றின் கையெழுத்துப் பிரதிகளை அச்சிடுவதற்காக கையளிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 396,780 ஆன செலவினமொன்றை மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. இத்தாமதம் திணைக்கள உத்தியோகத்தர்களின் தாமதத்தின் அடிப்படையில் இடம்பெற்றிருந்தது.

(ஆ) 2012 ஒக்தோபர் 30 இல் 24 வெளியார் சொற்களஞ்சிய ஆசிரியர்களுக்காக ரூபா 1,404,631 தொகையும் கலைக்களஞ்சிய அலுவலகத்தின் 11 வெளியக எழுத்தாளர்களுக்காக ரூபா 47,402 தொகையுமாக 2012 ஆம் ஆண்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அகராதி மற்றும் கலைக்களஞ்சியம் பிரித்தெடுப்புக்கள் என்பவற்றின் அச்சிடல் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்ற முடியாதிருந்தன.

(இ) கணக்காய்வுத் திகதியான 2012 ஒக்தோபர் 30 இல் வியாங்கொடை புத்தகக் களஞ்சியத்தின் இருப்பு பதிவேடுகளிலுள்ள தகவல்களின் பிரகாரம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்துவரும் சிங்கள கலைக்களஞ்சியத்தின் 3 முதல் 12 வரையான பதிப்புகளுக்குரிய ரூபா 2,033,813 பெறுமதியான 2761 நூல்களும் சிங்கள சொற்களஞ்சியத்தின் பல்வேறு தொகுதிகளுக்குரிய ரூபா 3,175,300 பெறுமதியான 9852 நூல்களும் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டன. இந்த நூல்கள் விற்பனை செய்யப்படவோ அல்லது பகிர்ந்தளிக்கப்பட்டோ இருக்காமையால் புத்தகங்கள் நிறம் மாறி வேறு இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டிருந்தன.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

அச்சிடப்பட்ட கலைக்களஞ்சியத்தின் 12 ஆம் பதிப்பின் 200 பிரதிகளுக்காக கொடுப்பனவு செய்வதற்காக இருப்புச் சான்றிதழ்களை வழங்கும் சந்தர்ப்பம் வரையில் அப்புத்தக இருப்பில் அரைப்பங்கு விநியோகிப்பட்டிருந்தமை மற்றும் அச்சிடப்பட்ட சிங்கள கலைக்களஞ்சியத்தின் 12 ஆம் பதிப்பின் பிரித்தெடுப்புக்களின் 12 மற்றும் 13 வகுதிகளில் 100 பிரதிகள் வீதம் களஞ்சியத்திற்கு ஒப்படைப்பதற்கு முன்னர் அச்சகத்திலிருந்து பெற்றுக்கொண்ட காரணத்தால் இந்த நூல்கள் களஞ்சியத்திற்கு பொறுப்பேற்றல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக முறையான இருப்புக் கட்டுப்பாடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 27 | 16 | 11 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | - | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 388 | 357 | 31 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 89 | 62 | 27 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 82 | 61 | 21 |
| | மொத்தம் | 589 | 496 | 93 |